

# பனிமயம்

## ஆகஸ்டு 2024

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



"என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது" (லூக். 1:47).

அன்புள்ள பனிமயத் தாயின் மக்களுக்கு!

வணக்கம். நலம் உண்டாவதாக.

நம் தாயின் திருவிழாவை கொடிப்பவனியோடும், கொடியேற்றத்தோடும் தொடங்கியுள்ளோம். தூத்துக்குடி மாநகரமே ஒன்றுகூடி வந்து "மரியே வாழ்க", "மரியே வாழ்க" என முழக்கமிட்டு அன்னையின் விழாவை தொடங்கியது மகிழ்ச்சியூட்டியது.

தாயை சந்திப்பதும், அவர் வழியாக இறையாசீர் பெறுவதும் மக்களுக்கு பேரானந்தமே. ஒவ்வொரு நாளும் அதிகாலையிலேயே அன்னையின் பிள்ளைகள் அன்னையைத் தேடி வந்து பக்தி உருக்கத்தோடு திருப்பலிகளில் பங்கெடுப்பதைப் பார்த்து பிரமித்துப் போகிறேன். மக்களின் விசுவாசம் என் விசுவாசத்தையே புரட்டிப் போடுகிறது என்றால் அது மிகையாகாது. அதிகாலையில் மட்டுமல்லாது நாள் முழுவதும் நடைபெறக்கூடிய வழிபாடுகளில் நேரம், காலம் பாராது, வசதிக் குறைவுகளை பொருட்படுத்தாது, உணவு தண்ணீர் கூட அருந்தாது வழிபாடுகளில் பங்கெடுப்பதும், கோயில் காப்பதும் நீங்கள் அன்னையின் மீது கொண்டிருக்கும் அன்பிற்கு சாட்சியாகும்.

மேற்சொன்ன உங்கள் பக்தி முயற்சிகளைப் பார்க்கும் தாய் மரி மகிழ்கின்றார். ஆனாலும் பக்தி முயற்சிகளோடு பிறரன்பையும் மாதா உங்களில் பார்த்து மகிழ விரும்புகிறார். அப்படியென்றால் மாதாவிடம் விளங்கிய பரிவு, கரிசனை நம்மிடம் விளங்குகிறதா? பிறருக்கு உதவி தேவை என்று அறிந்த தாயின் உள்ளம் அமைதியாய் இருக்கவில்லை. விரைந்து சென்று உதவி செய்தார் என்று லூக்கா 1:39ல் காண்கிறோம்.

மாதாவிடம் கற்றுக்கொள்ள வேண்டியது அவருடைய கனிவான குணத்தை. இந்தக் கனிவுதான் ஆவியின் கனிகளுள் ஒன்று என்று பவுலடியார் கலாத்தியர் 5:23ல் குறிப்பிடுகிறார். நம் ஆண்டவர் இயேசுவும் "கனிவுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமை சொத்தாக்கிக் கொள்வர்" என்று மத்தேயு 5:5ல் மலைப்பொழிவில் குறிப்பிடுகின்றார்.

மனிதர்கள் இன்று கனிவுள்ளவர்களாக வாழ்வதற்குப் பதிலாக கடின உள்ளம் கொண்டவர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள், வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கனிவுடைய தாயின் விழாவைக் கொண்டாடும் நாமும் கனிவுள்ளவர்களாக மாறுவோம். கனிவோடு பேசும்போது, கனிவோடு பார்க்கும்போது, கனிவோடு செயல்படும்போது பிறரும் மகிழ்கின்றனர். மரியன்னையும் மகிழ்கின்றார், இறைவனும் மகிழ்கின்றார். அன்னையின் விழா ஓர் ஆசியாக அமையட்டும்.

ஆண்டவரின் அருளும், அன்னையின் பரிந்துரையும் உங்களோடிருப்பதாக...

அன்பும், ஆசீரும்

**அருள்பணி. ஸ்டார்வின்**

திருத்தல அதிபர் & பங்குத் தந்தை



# உள்ளே...


1. மரியன்னையின் திருப்பெயர்கள் . . . . . . . . . . . 4

அருள்பணி. குமார்ராஜா

2. இறைவனின் திருச்சமூகம் . . . . . . . . . . . . . . . 6

கலாபன் வாஸ்

3. “என் எதிரியே! என்னைக் கண்டுபிடித்து விட்டாயா?”. . . . . . . . . . . . . . . 8

ம. வெனான்சியுஸ்

4. நாளாம் நாளாம் திருநாளாம் . . . . . . . . . . . . . 10

ஜோ. ரெஜினா கிரகோரி

5. கருவூலம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 12

முனைவர் .சி. ஜாக்சன்

6. பனிமய நேரலை 2024 . . . . . . . . . . . . . . . . 15

7. விவிலியப்போட்டி. . . . . . . . . . . . . . . . . . . . 16

8. பனிமயப் பகிர்வு. . . . . . . . . . . . . . . . . . . . . 19



உதயம் 25 தாரகை 12

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருள்பணி. ஸ்டார்வின்
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
புனித பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருள்பணி. ஸ்டார்வின்



**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |



வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : ‘பனிமயம்’
புனித பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com


## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### அரசியல் தலைவர்களுக்காக...

அரசியல் தலைவர்கள் தங்களின் சொந்த மக்களுக்குத் தொண்டாற்றவும் ஒருங்கிணைந்த மானுட மேம்பாடு மற்றும் பொது நலனுக்காகப் பணியாற்றவும், குறிப்பாக ஏழைகள் மற்றும் தம் வேலைகளை இழந்தவர்கள்மீது அக்கறை கொள்ளவும் நாம் மன்றாடுவோம்.

மரியன்னையின் திருப்பெயர்கள்

5

# இறையருளின் அன்னை



அன்னை மரியாவுக்குத் திருஅவை வழங்கியுள்ள விவிலிய **அடிப்படையிலான** ஒரு பெயரே இறையருளின் அன்னை (Mother of Divine Grace) என்பது. ஆம், மரியா இறைவனின் அருளை நிறைவாகப் பெற்றவர். அதையும் கடவுளின் இலவசக் கொடையாகப் பெற்றார்.

முற்காலத்தில் கடவுளின் அருளை மக்கள் கெஞ்சிக் கேட்க வேண்டியதிருந்தது. முதுபெரும் தந்தையர்களுள் ஒருவரான யாக்கோபு கடவுளின் அருளை எவ்வாறு பெற்றார் என்று ஒசேயா நூலில் வாசிக்கிறோம். யாக்கோபு "வானதூதரோடு போராடி வெற்றி கொண்டான்; கண்ணீர் சிந்தி, அவர் **அருளை** வேண்டிக்கொண்டான்; பெத்தேல் என்னுமிடத்தில் அவரை சந்தித்தான்; அவரும் அங்கே அவனுடன் பேசினார்" (ஒசே 12:4). யாக்கோபு கண்ணீர் சிந்தி கடவுளின் அருளைப் பெற்றார் என்பது ஒரு வியப்பான செய்தியே.

அவ்வாறே, "மக்களினங்கள் பலவும், வலிமை வாய்ந்த வேற்றினத்தாரும் படைகளின் ஆண்டவரை நாடவும் அவரது **அருளை மன்றாடவும்** எருசலேமுக்கு வருவார்கள்" (செக் 8:22) என்று செக்கரியா நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சிறப்பான ஒரு சிலர் மட்டுமே கடவுளின் அருளைப் பெற்றிருந்தார்கள். "தாவீது கடவுளின் **அருளைப்** பெற்றிருந்தார். எனவே அவர் யாக்கோபின் வீட்டார் வழிபடக் கடவுளுக்கு ஓர் உறைவிடம் அமைக்க விரும்பி அவரை வேண்டிக்கொண்டார்" (திப 7:46) என்கிறது திருத்தூதர் பணிகள் நூல்.

ஆனால், "நம் மீட்பராகிய கிறிஸ்து இயேசு உலகில் தோன்றியதன்மூலம் இப்போது **அருள்** வெளிப்பட்டுள்ளது" (2 திமொ 1:10). இந்த அருள் அனைவருக்கும் வழங்கப் பட்டுள்ளது. சிலருக்குக் குறைவாகவும், சிலருக்கு அதிகமாகவும் அவரவர் தேவைக்கேற்ப தரப்பட்டுள்ளது. "கிறிஸ்து கொடுக்க விரும்பும் அளவுக்கேற்ப நம் ஒவ்வொருவருக்கும் அருள் அளிக்கப் பட்டுள்ளது" (எபே 4:7).

அன்னை மரியாவோ அந்த இயேசுவையே பெற்றெடுக்கும் பேறு பெற்றவரானார். எனவேதான், கபிரியேல் தூதர் மரியாவுக்குத் தோன்றி, "**அருள் நிறைந்தவரே** வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார். கடவுளின் **அருளைக்** கண்டடைந்துள்ளீர்." (லூக் 1:28, 30) என்று வாழ்த்தினார்.

ஆம், மரியா மட்டுமே அருள் நிறைந்தவராக, அருள் மிகப்பெற்றவராக விளங்குகிறார். காரணம், அவர் அருளின் ஊற்றான இயேசுவின் தாய். அவரது நிறைவிலிருந்துதான் நாம் யாவரும் நிறைவாக அருள்பெற்றுள்ளோம். அவர் வழியாகவே அருளும் உண்மையும் வெளிப்பட்டன (யோவா 1:16-17). எனவே, அந்த இயேசுவையே பெற்றெடுக்கும் பேறுபெற்றவரான மரியாவை அருள் நிறைந்தவர் என்றும், இறையருளின் அன்னை என்றும் அழைப்பது தகுதியே. ★

6

# தூய்மைமிகு அன்னை



அன்னை மரியாவின் தூய்மைமிகு அன்னை (Mother Most Pure) என்னும் பெயர் திருஅவையின் தொன்மைமிகு நம்பிக்கையை வெளிப்படுத்தும் ஒன்று. மானிடர் அனைவரும் பிறப்புநிலைப் பாவத்தால் கறைப்பட்டிருக்கும் சூழலில், மரியா மட்டுமே வாழ்நாள் முழுவதும் தூய்மை நிறைந்தவராக வாழ்ந்தவர் என்பது நமது நம்பிக்கை.

தூய்மை என்பது கடவுளின் இயல்பல்லவா! கடவுள் மட்டுமே தூயவர் என்று அழைக்கப்படத் தகுதியானவர். “ஆண்டவரே, தெய்வங்களுள் உமக்கு நிகரானவர் எவர்? தூய்மையில் மேலோங்கியவர், அஞ்சத்தக்கவர், புகழ்ச்சிக்குரியவர், அருஞ்செயல் ஆற்றுபவர் ஆகிய உமக்கு நிகர் யார்?” (விப 15:11) என்று கேட்கிறது விடுதலைப் பயணநூல். விண்ணக உயிர்கள் கடவுளைத் “தூயவர், தூயவர், தூயவர்” (திவெ 4:8) என்று அல்லும் பகலும் இடையறாது பாடிக் கொண்டிருப்பதை யோவான் காட்சியாகக் கண்டார்.

அவர் தூயவராக இருப்பதால், அவரது படைப்புகளாகிய நாமும் தூய்மையாக வாழ வேண்டும். “தூயோராய் இருங்கள். ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர்” (லேவி 19:2) என்று மோசே வழியாகக் கடவுள் அறிவுறுத்தினார்.

அதே வேளையில் ஒரு சிலருக்கு மட்டும் தூய்மை என்னும் கொடையைக் கடவுள் தாமாகவே வழங்கினார். அன்னை மரியாவும், திருமுழுக்கு யோவானும் அத்தகைய சிறப்பு பெற்றவர்கள். அதிலும், மரியா பிறப்புக்கு முன்னரே கடவுளால் சிறப்பான அருள் வழங்கப்பட்டு தூய்மைப்படுத்தப்பட்டவர். எனவேதான், அவர் “பிறப்புநிலைப் பாவமின்றிப் பிறந்தவர்” என்பதைத் திருஅவை நம்பிக்கைப் பேருண்மையாகப் பறைசாற்றியுள்ளது.

இனிமைமிகு பாடல் நூலில் வரும் “என் அன்பே, நீ முழுவதும் அழகே! மறுவோ உன்னில் சிறிதும் இலதே” (இபா 4:7) என்னும் வரிகள் மரியன்னையையே சுட்டுகின்றன என்றனர் திருஅவைத் தந்தையர். மானிட இனம் முழுவதும் பாவத்தால் கறைப்பட்டது என்று சொன்ன புனித அகுஸ்தினார், “மரியாவுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டது. பாவமே அறியாத இறைமகனைப் பெற்றெடுக்கும் பேறு அவருக்குத் தரப்பட்டதால், கடவுள் அவரை சிறப்பான அருளால் நிரப்பித் தூய்மைப் படுத்தினார்” என்று எழுதினார்.

தூய்மையின் அவசியத்தை விவிலியம் வலியுறுத்துகிறது. “தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்” (மத் 5:8) என்பது இயேசுவின் அருள்வாக்கு. அதனையே “தூய்மையை நாடுங்கள். தூய்மையின்றி எவரும் ஆண்டவரைக் காணமாட்டார்” (எபி 12: 14) என்கிறது எபிரேயர் திருமடல்.

தூய்மையின்றி எவரும் ஆண்டவரைக் காண இயலாது என்றால், தூய்மையின்றி எப்படி ஒருவர் ஆண்டவரையே தம் உதிரத்தில் தாங்க முடியும்? எனவேதான், கடவுள் மரியாவுக்குத் தூய்மை என்னும் கொடையை சிறப்பாக வழங்கினார். எனவே, அவரை தூய்மைமிகு அன்னையே என்று நாம் வாழ்த்துவோம்!



அருள்பணி. குமார்ராஜா

# இறைவனின் திருச்சமூகம்



## 3. சமூகத்திற்கு அழைத்துச் செல்லும் திருமுழுக்கு

திருமுழுக்கின் வழியாக, புதியதும் நித்தியத்திற்குமான உடன்படிக்கைக்கு இயேசுவின் திருஇரத்தத்திற்குள் வரவேற்கப் படுகிறோம். இயேசுவோடு உடன்படிக்கையில் பிணைக்கப்பட்டிருப்பதால், சமூகத்துடன் இணைவதும் கடமையாகிறது. எனவே, கிறிஸ்தவச் சமூகத்தை உருவாக்கும் பொறுப்பு, திருமுழுக்கினால் வந்து சேருகிறது.

திருமுழுக்கு உடன்படிக்கை என்பது, கிறிஸ்துவோடு மட்டும் நமக்குள்ள அர்ப்பணிப்பல்ல - அவருடைய மக்களோடும் நமக்கு அர்ப்பணிப்பு. கிறிஸ்துவுடன் நமக்குள்ள உறவென்பது, ஒரு குடும்ப உறவாகும் - உடன்படிக்கையாகும்.

இயேசு விண்ணகம் செல்லுமுன், "நீ என் சகோதரர்களிடம் சென்று அவர்களிடம், 'என் தந்தையும் உங்கள் தந்தையும் என் கடவுளும் உங்கள் கடவுளுமானவரிடம் செல்லவிருக்கிறேன்' என்று சொல்" என்றார் - யோவா 20:17. பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையை மறுபடியும் உறுதிப் படுத்தினார். "நான் அவர்களின் கடவுளாய் இருப்பேன்; அவர்கள் என் மக்களாய் இருப்பார்கள் என்கிறார் ஆண்டவர்" - எரேமியா 31:33. இதன் வழியாக இயேசு நமக்குச் சொல்வது - அவருடைய தந்தை இப்போது நம்முடைய தந்தையுமாகின்றார்.

எனவே, புதிய உடன்படிக்கையின் மக்களினம் கடவுளின் சொந்தக் குடும்பம், ஒரு சமூகமாக ஒன்றிணைந்து உடன்படிக்கை அன்பில் வாழ அழைக்கப்படுகின்றோம்.

குடும்பப் பண்புகள் 'HESED WE EMET' என்ற சிறப்பான எபிரேயச் சொற்களால் எடுத்துரைக்கப்படுகிறது. இந்தச் சொற்களை வேறெந்த மொழியிலும் சரியான முறையில் மொழி பெயர்க்க இயலாது. எனினும், நிலையான அன்பு - மாறாத அன்பு - உறுதியான அன்பு - கனிவான அன்பு - அன்பும் நேர்மையும் என்று வகைப் படுத்தலாம். நிபந்தனையற்ற உண்மையான அன்புடனும், உதவும் பண்புடனும், மன்னிக்கும் மனப் பக்குவத்துடனும் மிளிர்வதே கிறித்தவக் குடும்பம். கிறித்தவக் குடும்பமென்பது, திருமுழுக்குப் பெற்ற சமூகம்; இறைவனின் குடும்பம்.

இறைவனோடு திருமுழுக்கின் வழியாக நாம் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி வாழ்வதென்றால், நாம் வாழும் சமூகத்திலுள்ள அனைத்து மக்களையும் நேசிக்கவும், தேவையான உதவிகளைச் செய்யவும் இறையன்பைப் பகிர்ந்து கொள்வதாகும். நமது மனித உடல் எப்படிப் பல்வேறு உறுப்புகளால் உருவாக்கப்பட்டுள்ளதோ, அப்படியே கிறிஸ்தவச் சமூகமும் பல்வேறு மக்களால் இணைக்கப்பட்டுள்ளது. நமது உடலில் எந்த ஓர் உறுப்பையாவது 'தேவையில்லை' என்று சொல்வோமா? நாம் வாழும் சமூகத்தில் உள்ளவர்களில் யாரையாவது 'தேவை இல்லாதவர்கள்' என்று எப்படிப் புறக்கணிக்க முடியும்? அது ஊனமுற்ற சமூகமாக அல்லவா தோன்றும்!.... எல்லா மக்களும் இறையன்பினால் படைக்கப்பட்டவர்கள் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இதுதான் நமது திருமுழுக்கு உடன்படிக்கை.

## 4. குடும்பம், சமூகம், உலக மீட்பு

திருமுழுக்கினால் ஒவ்வொருவரும் இயேசுவின் முப்பெரும் பணிகளைச் செய்யும் உரிமை பெறுகின்றார்கள். போதித்தல், வழிநடத்துதல், ஆற்றுபடுத்துதல் என்பதே முப்பணிகள்.

இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் - திருமுழுக்கினால் ஒவ்வொருவரும் பொதுக் குருத்துவம் பெறுகிறோம்... பொதுக் குருத்துவத்தினால் இறைவார்த்தையைப் போதிக்கும் உரிமை பெற்றுள்ளோம். இதன் வழியாக இறைவார்த்தைச் சமூகங்களை உருவாக்க அழைக்கப்படுகிறோம். அனைத்துலகச் சகோதரத்துவத்தின் மூலமாகவே மீட்புப் பெற முடியும்.

“தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள். அவர் இறைமக்களுக்கான ஒளிமயமான உரிமைப்பேற்றில் பங்குபெற உங்களைத் தகுதியாக்கியுள்ளார். அவரே இருளின் அதிகாரத்திலிருந்து நம்மை விடுவித்துத் தம் அன்பார்ந்த மகனின் ஆட்சிக்குட்படுத்தினார். அம்மகனால்தான் நாம் பாவமன்னிப்பாகிய மீட்பைப் பெறுகிறோம்” - கொலோ 1:12-14.

“நாம் தூயோராகவும் மாசற்றோராகவும் தம் திருமுன் விளங்கும்படி, உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார். அவர் நம்மை இயேசுக் கிறிஸ்துவின் மூலம் தமக்குச் சொந்தமான பிள்ளைகளாக்கிக் கொள்ள அன்பினால் முன்குறித்து வைத்தார்” - எபே 1:46.

“தம்மால் முன்பே தேர்ந்துகொள்ளப் பட்டவர்கள் தம் மகனின் சாயலுக்கேற்றவாறு இருக்கவேண்டுமெனக் கடவுள் முன்குறித்து வைத்தார்; அச்சகோதரர் சகோதரிகள் பலருள் தம் மகன் தலைப்பேறானவராய் இருக்க வேண்டுமென்றே இப்படிச் செய்தார். தாம் அழைத்தோரை தமக்கு ஏற்புடையோராக்கி இருக்கிறார்; தமக்கு ஏற்புடையோரைத் தம் மாட்சியில் பங்குபெறச் செய்தார்” - உரோ 8:29,30.

எனவே, மீட்பு என்பது இறைவனின் மக்களினம், சகோதர சகோதரிகளாகக் கிறிஸ்துவில் இணைந்து, தந்தையாம் இறைவனில் மகிழ்வதாகும்.

### மீட்பில் குடும்பங்களின் பணி

கிறித்தவச் சமூகத்தின் அடித்தளமாகக் குடும்பங்கள் இருப்பதால், உலக மீட்பில் பெரும்பங்கும் முக்கியமும் பெறுகின்றன. உலகளாவிய குடும்பங்களாக ஒன்றிணைந்து செயல்படாத வரை, மனிதகுலம் மீட்பு பெற இயலாது.

அருங்கொடை இயக்கக் கிறித்தவச் சமூகங்கள் பல்வேறு குழுக்கள் கொண்டதாகும். ஒவ்வொன்றும் தனித்தனிச் சிறப்புடன் விளங்குபவை - இளையோர் ஊழியம் - சிறார் ஊழியம் - பாடகர் குழு ஊழியம் - முதியோர் ஊழியம் என விதவிதமான வழிகளில் குடும்ப உறுப்பினர்கள் தங்கள் திறமைக்கேற்ற பணிகளில் ஈடுபட்டுச் சமூகத்தை முன்னேற்றுவது, கிறித்தவர்கள் தங்களின் திருமுழுக்கு உடன்படிக்கையை நிறைவேற்றி ஒத்துழைத்தால் மட்டுமே, பயனுள்ள சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

தனிக் குடும்பமாகச் செயல்படுவதால் மட்டுமே, ஒன்றிணைந்த சமூகத்தை உருவாக்க இயலாது. பிற குடும்பங்களோடும் இணைந்து செயல்படும்போதுதான் நல்லதொரு கிறிஸ்தவச்

‘COMMUNITY IN THE LORD’ - என்ற நூலின் உதவியுடன்



**கலாபன் வாஸ்**



# "என் எதிரியே! என்னைக் கண்டுபிடித்து விட்டாயா?"

(1அர 21:20)

ஜூலை மாதம், ஆடிக் காற்றில் அம்மியே பறக்கும் என்பார்கள். ஆனால், ஜவுளிக் கடைகளில் வந்திறங்கியுள்ள வண்ண வண்ண, புத்தம் புது தோற்றத்துடன், துணிகளும், ஆயத்த ஆடைகளும் போட்டி போட்டுக் கொண்டு அங்கும் இங்கும் ஆடிக்கொண்டு கடைகளை அலங்கரித்த வண்ணமிருந்தன. சில கடைகளில் முன்கூட்டியே வெளிநாட்டு விமானப் பயணம், வெளிமாநிலக் கப்பல் பயணம், உள்நாட்டு ரயில் பயணம் எனப் போட்டி போட்டுக் கொண்டு வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் குலுக்கல் சீட்டுகளை நடத்தி, அதில் வெற்றியும் கண்டுள்ளனர்.

தூத்துக்குடி நகரத்தில் உள்ள தங்கும் விடுதிகளில் இடமின்மையால், மக்கள். அருகருகே உள்ள நகரங்களில் விடுதிகளில் அறைகள் எடுத்துத் தங்க ஆரம்பித்தனர். சென்ற ஆண்டு தங்கத்தேர்த் திருவிழாவில் 88 திருப்பலிகளில் பங்கேற்று பனிமயத் தாயின் பரிந்துரையில் அற்புதங்களைப் பெற்ற பனிமயத்தாயின் பாசமுள்ள மக்கள் நன்றி சொல்ல அலை அலையாய் வந்து கொண்டிருந்தனர்.

"ஏய், விமலா என்ன சத்தத்தையே காணோம்?"

"ஆமாம், லெட்சுமி, நானே கேட்க வேண்டும் என்று நினைத்தேன். நீ முந்திக் கொண்டாய்!" என்றாள் கனகா.

"எதைப் பற்றி நீங்கள் உரையாடுகிறீர்கள்?"

"என்னடி? நாங்களே உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்க பனிமய மாதா திருவிழாவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். நீ என்னடாவென்றால் எதுவுமே நடக்காதது போல் இருக்கிறாயே?"

"நீங்கள் கூந்தல் உள்ளவா! அள்ளி முடிகிறீர்கள். என்னைப் பாருங்கள் என் தலைமுடி தோளை மட்டும்தான் தொட்டுக் கொண்டிருக்கிறது" என்று சிலேடையாகப் பேசினாள் விமலா.

"கிண்டலைப் பாரு!"

விமலா, நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவள். கணவனுக்கு உடல் நலக் குறைவாக இருப்பதால் கடல் தொழிலில் நிரந்தர வருமானம் கிடையாது. தன் ஒரு சம்பாத்தியத்தை வைத்துக் கணவனது அம்மா, அப்பா, திருமண வயதில் உள்ள தங்கை ஆகியோருக்கும் செலவு செய்ய வேண்டியதிருக்கிறது. எனவே, மிகச் சிக்கனமாகத் தனது வாழ்க்கைப் படகை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

ஆகஸ்டு நான்காம் தேதி ஞாயிறு காலை முதல் திருப்பலிக்குச் சென்று வந்த விமலா, வீட்டு வேலைகளில் மூழ்கியிருந்தாள்.

வாசலில் யாரோ அழைக்கும் சத்தம் கேட்டு இடுப்பில் சொருகியிருந்த சேலையைப் பிரித்து சரிசெய்து "யாரு?" என்றவாறு வாயிலுக்கு வந்தாள்.

அவளது பால்ய பள்ளி சிநேகிதி, ஜெனிபர் தன் குழந்தைளுடன் நின்று கொண்டிருந்தார். அவளது கணவர் காரிலிருந்து வந்து கொண்டிருந்தார்.

புன்முறுவலுடன் நின்றவளைப் பார்த்ததும், "ஏய் எதிரி விமலா? என்னைக் கண்டுபிடித்து விட்டாயா?" என்று அதே பள்ளிக்கூடக் குறும்புடன் விசாரித்தாள் ஜெனிபர்.

பள்ளியில் இருவருக்கும்தான் முதல் இரண்டு இடங்களுக்குப் போட்டி நடைபெறும். அதனால்தான் enemy என்று ஆங்கிலத்தில் உரிமையுடன் அழைத்துக் கொள்வார்கள்.

"ஆங், தெரிகிறது. ஆனால், நீ எப்படி இங்கே? வா, உள்ளே போய்ப் பேசுவோம். வாங்கண்ணே" என்ற தூத்துக்குடியின் அன்பு மொழியில் அவளது கணவரை அழைத்தாள். கேட்ட அவர் மெய்சிலிர்த்துப் போனார்.

"என் அத்தானிடம் சொன்னேன், என் எதிரியுடன் பரிசுத்த பனிமய மாதா திருவிழாவைக் கொண்டாடுவோம் என்று". விழுந்து விழுந்து சிரித்தார்.

"அது சரி. என் வீடு வசதி குறைவாக இருக்குமே உங்களுக்கு"

"ஏய், உன் மனசு நிறைவாக இருப்பதே எங்களுக்குப் போதும்" என்றவாறு அவளுக்கு ஒத்தாசையாக வீட்டு வேலையில் ஈடுபட்டாள் ஜெனிபர்.

அவரது கணவரும் சிங்கப்பூரில் வாங்கி வந்த பொருட்களை ஆங்காங்கே வைத்து வீட்டை அலங்கரித்தார்.

"விமலா, வா, ஜவுளிக்கடைக்குப் போய் உங்கள் குடும்பத்திற்குத் தேவையானவற்றை வாங்கிவிட்டு, அப்படியே உன் ஆளையும், என் ஆளையும் பார்த்து விட்டு வரலாம்!"

"புரியவில்லையே? யாரு உன் ஆளு, என் ஆளு?"

"அதுதாண்டி, என்னை உற்சாகப்படுத்திய ஆசிரியை ஆரோக்கிய மேரி, உன்னைப் பாசத்துடன் கவனித்த அருட்சகோதரி ஜெயசீலா. இருவரும் தானே நமது நலனில் விசேஷ அக்கறையுடன் நாம் சிறப்பான மதிப்பெண்கள் எடுக்கக் காரணமாயிருந்தார்கள்!"

மாலை ஆராதனைக்குச் சற்று முன்பாக சென்றார்கள். "வா நம் அதிபர் பங்குத் தந்தை நமது ஆலய முன்னாள் பங்குத் தந்தையைப் பார்த்து ஆசீர் பெற்று வருவோம்"

"யாரு, அவரு?"

"அவர்தான் , மக்களே நலமா என்பாரே?"

"ஓ! அவரா? கண்டிப்பாகப் பார்க்கணும்"

இருவரும் அதிபர் தந்தையிடம் சென்று முழந்தாள்படியிட்டு ஆசீர் பெற்றனர்.

"நலமா மக்களே விமலா, ஜெனிபர். enemies ஒன்று சேர்ந்து வந்துள்ளீர்கள்?"

"நினைவில் வைத்துள்ளீர்களா தந்தையே?" என்று வியப்புடன் கேட்டாள் ஜெனிபர்.

"எப்படிம்மா மறக்க முடியும். பள்ளி ஆண்டு விழாவில் பரிசு பெற. மாறி மாறி உங்கள் தலைமை ஆசிரியை அருட்சகோதரி அழைப்பார்களே! அடுத்து மக்கள் காத்திருப்பதை உணர்ந்த இருவரும், நன்றி தந்தையே என விடைபெற்றனர்.

திருவிழா முடிந்ததும் ஜெனிபர் குடும்பத்தினர் விடைபெற்றனர்.

மக்ரூன் பெட்டியைக் கொடுக்கவே, "என்ன விமலா? நீ இதையெல்லாம் கொடுத்தாத்தான் நம்ம நட்பு தெரியணுமா,"

"போய் வா எதிரியே!" என அன்புடன் வழியனுப்பினாள் விமலா.



ம. வெனான்சியுஸ்

# நாளாம் நாளாம் திருநாளாம்



**பொன்மகுடம் அணி**ந்து, தங்கம் நிறைந்த மேனியுடையவளாய், பொங்கும் அருளினை மாந்தருக்கு அள்ளி வழங்கிடத் தங்கத் தேரினிலே பவனி வந்த தஸ்நேவிஸ் தாய் மரியின் **"தங்கத் தேர்த் திருவிழா"**வின் நினைவலைகள் நம் உள்ளங்களை விட்டு இன்னும் அகலவில்லை. அதற்குள் ஓராண்டு வேகமாக ஓடி நம் ஏக்கத்தைத் தீர்க்க, ஆனந்தத்தைக் கூட்ட, மீண்டும் அன்னையின் திருவிழாவைக் கொண்டாடும் நேரம் இதோ வந்துவிட்டது.

ஆடி மாதம் என்றாலே நம் உள்ளமெல்லாம் நிறைந்து இருப்பது, **'ஆகட்டும்'** என்றே ஆண்டவரின் கட்டளையைக் கீழ்ப்படிதலுடன் ஏற்று இறைவனுக்கே தாயாகும் பேறு பெற்று மகிமையடைந்த நம் அன்னை பனிமயத் தாய் மரியை மகிமைப்படுத்தும் திருவிழாதானே.

சுமார் 442 ஆண்டுகளுக்கு முன்னே பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள மணிலாவில் இருந்து நம் திருமந்திர நகரைத் தேடி வந்த அன்னையின் திருவுருவ சுரூபம் நமக்குக் கிடைத்த நாளாகிய **ஆகஸ்ட் 5ஆம் தேதி** தான் பனி பொழியாத பருவத்தில் 'பனிமழை' பொழிந்த, உரோமாபுரியில் உள்ள எஸ்கலின் மலையில் ஆலயம் எழுப்பி பனிமய மாதாவின் திருவிழா கொண்டாடப்பட்டது. எனவே, இந்நாளிலே நாமும், நமது ஊரும் மட்டுமல்ல, உலகத்தின் ஒவ்வொரு முனையிலும் உள்ள கோடான கோடி மக்களுடன் அன்னையின் திருவிழாவைக் கொண்டாடுகின்றோம்.

பனிமயத் தாயை ஈன்றெடுத்த புனித அன்னம்மாள், புனித சுவக்கீன் இவர்களது திருவிழாவாகிய ஜூலை 26 முதல் 11 நாள் சாதி, மத பேதம் இன்றி, அனைத்து மக்களும் பரிசுத்த பனிமயத் தாயைத் தேடி வந்து, அன்னையை மகிமைப்படுத்தி, சிறப்பித்து, அன்னையின் அன்பை நாளும் சுவைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது நிரூபிக்கப் படும் உண்மை.

திருவிழா கொடியேற்றத்தின் முன்தினம் காணிக்கைப் பெரும் பவனியில், கோபுரமாய் குவியும் காணிக்கைகள் அன்னை நமக்குச் செய்த நன்மைகளின் நன்றியைப் பிரதிபலிக்கும். அன்னையின் கொடியேற்ற விழாவிலே கோடி மக்களின் ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள், தேவைகள் வான்வரை முட்டும். சேவல் கூவுமுன் ஆலய மணியின் ஓசை ஒலிக்க, செபமாலையுடன் தொடங்கி தொடர்ந்திருக்கும் திருப்பலிகளில் விசுவாசிகளின் கூட்டம் நிறைந்திருக்கும். மறைந்த விசுவாசிகளை வான்சேர்க்கும் வேண்டுதல்களும் திருப்பலியில் எழுப்பப் படும்.

மறைமாவட்டத்தின் பங்கு ஆலயங்கள், கல்வி நிலையங்கள், துறவற சபையினர், சமூகப் பணியாளர்கள், முதியோர், இளையோர், மாற்றுத் திறனாளிகள், அற நிலையங்கள், பக்த சபைகள், வெளிநாட்டில் பயணம் செய்பவர்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், இம்மண்ணின் மைந்தர்கள் மட்டுமல்ல, பல்வேறு திசைகளிலிருந்தும் திருயாத்திரையாகக் கலந்து கொள்ளும் திருப்பலிகள் 'திருஅவை'யையே அழைத்து வரும்.

வண்ண விளக்குகள், ஆலயத்தை வெளிச்சமாக்கி, விண்ணகத்தின் ஒளியை மண்ணிற்குக் கொண்டுவரும். விளம்பரச் சுவடுகள், ஊர் முழுவதும் எதிரொலிக்கும். தெருவெல்லாம் கடைகள் வணிகருக்கு வாழ்வு தரும். ஊஞ்சல்கள், இராட்டினங்கள் சிறுவருக்கு மகிழ்வு தரும். வண்ணப் பட்டாடைகள் பெண்களுக்கு பூரிப்பைத் தரும். பஜனைப் பாடல்கள் ஆண்களுக்குப் பெருமை சேர்க்கும். புகைவண்டிகள், பேருந்துகளில் மக்கள் வெள்ளம் நிறைந்திருக்க, சிற்றுந்துகளும் சாலைகளை மறைத்து நிற்கும்.

அத்தனை ஆடம்பரங்களுக்கும் மத்தியிலே, அன்னையைத் தரிசித்து **மகிமைப்படுத்த ஓடிவரும் பக்தர்களின் விசுவாசம் அளவிட முடியாதது.** திருப்பலி களில் கலந்து கொள்வதோடு, சிறிதே ஓய்வெடுக்கும் மதிய வேளையிலும் அயராமல் ஓடி வந்து செபமாலை, பிரார்த்தனை எனத் 'தேர்சு' என்ற வழிபாட்டில் கலந்து கொள்ளும் பக்தர்கள், அன்னையை மகிமைப்படுத்திப் பேரானந்தம் கொள்ளும் காட்சி உள்ளத்தை சிலிர்க்க வைக்கும்.

மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர்வாதத்தின்போது, **"பாவிகளுக்கு அடைக்கலமே, பாவிகள் மனந்திரும்ப வேண்டிக் கொள்ளும்'** என, உலகில் எந்த ஆலயத்தில் இல்லாத வழிபாட்டுப் பாடலைப் பாடும்போது பக்தர்களின் உருக்கமான வேண்டுதல் அவர்களை இறைவன்பால் திருப்பும்.

இன்னும் அன்னை முன் பாடும் விருத்தங்கள் அவள் புகழுக்கு மெருகூட்டும். அத்துடன் இந்நவநாட்களில் அன்னைக்குப் பொன்மகுடம் அணிவித்தல், சிறுவர்களுக்கு புதுநன்மை, வீதிகளில் திவ்ய நற்கருணைப் பவனி, பனிமயத் தாயின் தேர்ப்பவனி ஆண்டவரின் அருளை அள்ளித்தரும். இவற்றோடு ஊரிலுள்ள அனைத்துக் கல்வி நிலையங்களின் கலைநிகழ்ச்சிகள் திருவிழாவைக் கலகலப்பாக்கும்.

**ஏன் இந்த சிறப்பு?** என்ற வினாவிற்கு விடை எழுத ஆரம்பித்தால் முடிவே இராது.

"என் ஆன்மா இறைவனையே ஏற்றிப் போற்றிப் புகழ்ந்திடுதே, தாழ்நிலை நின்ற தம் அடியவளைக் கடைக்கண் நோக்கி அருள் செய்தார்" என்று ஆண்டவரைப் போற்றி தானும் மீட்புப் பணியில் இருந்தவள் நம் அன்னை.

அமல உற்பவியாய் பிறந்த அன்னை, **"அருள்நிறைந்தவளே! ஆண்டவர் உம்முடனே"** என்ற கபிரியேல் தூதரின் தூதுரையை ஏற்று இறைமகனைக் கருவில் தாங்கிய கன்னித்தாய் நம் அன்னை. இறைமகனை சுமந்திருக்கும் சுகமான சுமையுடன் எலிசபெத்தம்மாளை சந்தித்து அவள் சுமையை எளிதாக்கச் சென்று பிறரன்புப் பணியை நடைமுறைப் படுத்தியவள் நம் அன்னை. கானாவூர் திருமணத்தில் இறைமகனிடம் பரிந்துரைத்துப் புதுமை பெற்றுத் தந்த தாய்மையின் சிகரம் நம் அன்னை. மீட்பரை சிலுவையில் தந்து மீட்புப் பணியை நிறைவேற்றிய வீரத்தாய் நம் அன்னை.

திருஅவையைத் தோற்றுவித்தவள், வானிறை வந்த சீதனமாக, உலகம் தோன்றும் முன்னே தந்தை கடவுளால் தேர்ந்தெடுக்கப் பட்ட அன்னை நம் அன்னை.

அந்தப் பனிமயத்தாய் நமது அன்னையாக நமக்குப் பல்வேறு வரங்களைத் தரக் காத்திருக்கிறாள். அனைவரும் அன்னையைத் தேடி வந்து அவள் அன்பை முழுக்க முழுக்க சுவைப்போம்.



**ஜோ. ரெஜினா கிரகோரி**

# கருவூலம்



ஆகஸ்ட் மாதம் வந்துவிட்டது என்றாலே தூத்துக்குடியின் மொத்த தெருக்களும் பரிசுத்த பனிமய அன்னை பேராலயத்தை நோக்கி பயணப்படும்.

ஆண்டு முழுவதும் ஏன் தங்கள் வாழ்வின் இந்நாள்வரை பனிமய அன்னை வழியாக பெற்றுக்கொண்ட எல்லா நன்மைகள் மற்றும் அற்புதங்களுக்காக தங்கள் நன்றியை ஆனந்த கண்ணீருடன் செலுத்த மக்கள் வெள்ளம் அன்னையின் பாதத்தில் கூடும். அன்னையின் திருவிழா சாதி மத இன பேதங்களைக் கடந்து சமத்துவத்தில் சங்கமிக்கும்.

இந்தத் திருவிழாப் பயணம் வேறெந்த வகையில் நமக்கு பயன்படவேண்டும்? என்ற கேள்விதான் இந்த பகிர்வின் தொடக்கப்புள்ளி.

மருத்துவமனை. ஐசியூ-வில் அந்த முதியவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரின் உடல்நிலை மிகவும் சீர்கெட்டிருந்தது.

ஐசியூ-வுக்கு வெளியே அவருடைய இரண்டு மகள்கள் அமர்ந்திருந்தார்கள். இருவருக்குமிடையே மௌனம் நிலவியது. சில நிமிடங்களுக்கு ஒருமுறை ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டாலும், இருவருமே பேசிக்கொள்ளவில்லை.

மருத்துவர் வந்தார். "உங்க அப்பாவோட நிலைமை மோசமா இருக்கு. மூளையில சின்னதா ஒரு கட்டி... உடனே அறுவை சிகிச்சை பண்ணியாகணும். அறுவை சிகிச்சைக்கே நாலரை லட்ச ரூபா ஆகும். அதுக்கு மேல மருந்து, அறை வாடகை அது இதுன்னு மொத்தம் ஆறு லட்சம் ஆகும்" என்றார்.

மூத்த மகள், ஒருமுறை தன் தங்கையைக் கூர்ந்து பார்த்துவிட்டு, மருத்துவர் பக்கம் திரும்பினாள். "டாக்டர் இந்த அறுவை சிகிச்சை செஞ்சுட்டா, எங்க அப்பா பொழைச்சிடுவாரா?" என கேட்டாள்.

அதற்கு மருத்துவர் "அதை உறுதியாச் சொல்ல முடியாது. வயசு எழுபதுக்கு மேல ஆகுதுல்ல..?" என கூறி முடிக்கும் முன்னரே, "அவரு பொழைக்கிறதுக்கான சான்ஸ் எவ்வளவு டாக்டர்?" என தொடர்ந்தாள் மூத்த பெண்.

மருத்துவர் யோசனையோடு அவளைப் பார்த்தார். "முப்பது சதவீதம். நீங்கள் யோசிச்சுட்டு சீக்கிரம் சொல்லுங்க" என்று சொல்லிவிட்டு மருத்துவர் அங்கிருந்து நகர்ந்தார்.

மூத்தவள், தங்கையைப் பார்த்தாள். "என்ன செய்யலாம்னு நீ நினைக்கிறே ..." என கேட்டதற்கு, இளையவள் "இதுல யோசிக்கறதுக்கு என்னக்கா இருக்கு. உடனே ஆபரேஷன் செஞ்சுட வேண்டியது தான்" என பரிதவிப்போடு பதில் சொன்னாள்.

"அவ்வளவு பணம் உன்கிட்ட இருக்கா?" என நடுத்தர குடும்பத்தில் வாழும் தங்கைக்கு கிடுக்குப்பிடிபோட்டாள் கொஞ்சம் பணக்கார வீட்டில் வாழும் அக்கா.

தங்கை தலை குனிந்தபடி சொன்னாள். "என்கிட்ட இல்லை தான். ஆனா உயிருக்குப் போராடிக்கிட்டு இருக்குறது நம்ம அப்பாவாச்சே... அப்பிடியே விட்டுட முடியுமா... நீ பாதி பணம் குடு. நானும் பாதிப் பணத்தை எப்பிடியாவது புரட்டிடுறேன். அப்பாவ காப்பாத்திடலாம்." என்றாள் இளையவள் .

"உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு... டாக்டர் என்ன சொன்னாருன்னு கேட்டேல்ல... அறுவை சிகிச்சை செஞ்சாலும் அப்பா பொழைக்கிறது நிச்சயமில்லை. அவருக்கு வயசும் எழுபதுக்கு மேல ஆகிடுச்சு. இந்த நிலைமையில நான் எப்பிடி மூணு லட்ச ரூபா குடுப்பேன்... எனக்கும் ரெண்டு பிள்ளைங்க இருக்காங்க. அவங்களோட படிப்பு, எதிர்காலம்னு பார்த்துப் பார்த்து செலவழிக்க வேண்டியிருக்கு. அதுக்கெல்லாம் நானே என்ன செய்யறதுன்னு தெரியாம முழிச்சுக்கிட்டு இருக்கேன். இந்தா பாரு... நம்ம அப்பா உயிரோட இருக்கணும்னு கடவுள் விரும்பினாருன்னா, நிச்சயம் ஆபரேஷன் செய்யாமலேயே நல்லா இருப்பாரு. நம்ம அப்பா இனியும் உயிரோட இருக்க வேணாம்னு கடவுள் நினைச்சாருன்னா, என்ன செஞ்சாலும் பொழைக்க மாட்டாரு. புரிஞ்சுக்க?" என அக்கா கூறியதுதான் தாமதம், தங்கை வெடித்து அழ ஆரம்பித்தாள்.

"என்னக்கா இப்பிடிப் பேசுற... ஐசியூ-வுல இருக்குறது நம்ம அப்பாக்கா..." என கதறினாள்.

மூத்தவள் பல்லைக் கடித்தபடி சொன்னாள்... "எனக்கு மட்டும் அப்பாமேல பாசம் இல்லைன்னா நினைக்கிறே... யதார்த்தத்தைப் புரிஞ்சுக்க, இத்தனை லட்சம் செலவு பண்ணினாலும் ஐம்பது சதவீதம் கூட சான்ஸ் இல்லைன்னா, அந்த அறுவை சிகிச்சையை எதுக்காகச் செய்யணும்... அப்பாவுக்கு இந்த ஆபரேஷன் செய்யறது வேஸ்ட்டு. அவ்வளவுதான் சொல்லுவேன். அப்புறம் உன் இஷ்டம்."

மூத்தவள், குறுகுறுவென்று தங்கையையே பார்த்தாள். தங்கை திடமான குரலில் சொன்னாள்... "சரிக்கா. நான் பார்த்துக்கறேன்"

தங்கை, ஐசியூவுக்குள் நுழைந்தாள். அப்பா, கண்களை மூடிப் படுத்திருந்தார். அவரின் தோளைத் தொட்டாள். அப்பா, மெல்லக் கண்களைத் திறந்தார்.

லேசாகச் சிரித்தார். "அக்கா எங்கேம்மா?" என்று கேட்டார்.

"அவளுக்கு ஏதோ அர்ஜென்ட் வேலையாம்ப்பா. கிளம்பிட்டா" என்றாள் இளைய மகள்

வீட்டுக்குத் திரும்பிய முதியவரின் இளைய மகள், தன்னுடைய நகைகளை விற்றாள். அப்படி இப்படியென்று இரண்டு நாள்களில் மொத்தப் பணத்தையும் புரட்டிவிட்டாள். அந்தப் பெரியவருக்கு ஆபரேஷன் நடந்தது. அதிசயிக்கதக்க வகையில் அந்த முதியவர் நலமடைந்தார்.

சில நாள்கள் கழித்து, அக்கா, தங்கையிடம் தனிமையில் பேசினாள். "எப்படி அப்பா குணமானார். மருத்துவர் கூட நம்பிக்கை இல்லாம சொல்லும் போது நீ எப்படி அதுக்கு ஒத்துகிட்ட?"

"அறுவை சிகிச்சை நடந்த நாள்கள்ல ... என் கையை எடுத்து அவரோட உள்ளங்கையில பொத்தி வெச்சுக்கிட்டேன். அவரோட பழைய நினைவுகளை சொல்லி நம்பிக்கை ஊட்டினேன். அதற்கு அப்பா என் செல்ல மகளே... நான் இந்த நிலைமையில இருந்தும், கடைசி வரைக்கும் என்னை விட்டுப் போகாம கூடவே இருந்தியே... அது போதும்டா. இதை நான் மறக்கவே மாட்டேன்னு சொன்னாரு. சின்ன வயசுல நம்ம கூட அவர் இருந்த நினைவுகள ரசிச்சு ரசிச்சு பேசுனாரு. நான் கலங்கிப் போயிட்டேன்க்கா. அந்த வார்த்தைகள் போதும். அதை விடவா வேற மருந்து வேணும்?" என தங்கை பேசி முடிக்க, ,மூத்தவள் பதில் சொல்ல முடியாமல் தங்கையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.



நினைவுகள் பல நேரங்களில் நம்பிக்கை ஊட்டக் கூடியவை. எனவேதான் பழைய நினைவுகளை அசைபோடும்போது மனது துன்பங்களை மறக்கிறது.

நன்மைகள் செய்த கடவுளை நினைத்து நன்றி கூறுவது எத்துணை மேலானது. அதை விட நம்பிக்கை தருவது வேறென்ன?

"மரியா இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்தார்" எனும் இறைவார்த்தை (லூக்கா 2:19) தன் வாழ்வின் நிகழ்வுகள் அனைத்தையும் மனதெனும் கருவூலத்தில் மரியா சேகரித்துக் கெண்டிருந்தார் என்று நமக்கு சொல்கிறது.

படங்களைக் கிழித்துப் போட்டு அவற்றை மீண்டும் சேர்த்துப் படத்தை உருவாக்கும் விளையாட்டில், நாம் ஒவ்வொரு படமாக ஒன்றோடொன்று பொருத்துவதுபோல, வானதூதரின் வருகை, மங்கள வார்த்தை, எலிசபெத்தை நோக்கிய பயணம், திருமுழுக்கு யோவானின் பிறப்பு, பெத்லகேம் நோக்கிய பயணம், இயேசுவை காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல், பன்னிரெண்டு வயதில் எருசலேமில் இயேசுவைத் தேடி கண்டுபிடித்தல், கானாவூர் திருமணம், கல்வாரி என அனைத்துப் புள்ளிகளும் தன் வாழ்வில் ஒன்றோடொன்று இணைவதைக் காணத் தொடங்குகிறார் அன்னை மரியா. தன் உள் மனம் நோக்கிப் புறப்படுகிறார்.

மரியாவின் உள்மனப் பயணம் இந்த திருவிழா காலத்தில் நாம் மேற்கொள்ள வேண்டிய முக்கியமான பயணம் ஆகும்.

ஆப்பிள் நிறுவனர் ஸ்டீவ் ஜாப்ஸ், புள்ளிகளை இணைத்தல் பற்றிப் பேசும்போது நம் வாழ்வில் நடக்கிற அனைத்து நிகழ்வுகளும், நாம் சந்திக்கிற அனைத்து நபர்களும் ஒன்றோடொன்று, ஒருவரோடொருவர் இணைந்தவை.

வாழ்வின் நிகழ்வுகளைக் கொஞ்சம் தள்ளி வைத்து, நாம் கொஞ்சம் தள்ளி நின்று அவற்றைப் பார்க்கும்போது அவை இணைந்திருக்கிற விதம் நமக்குப் புரியத் தொடங்குகிறது. பொறுமையும், உணர்வுகள் மேலாண்மையும் இதற்கு அவசியம். அனைத்தையும் பொருத்திப் பார்க்கக் கூடிய ஒருவர், பொருந்தாதவற்றைப் புறந்தள்ளிவிட்டு மனஅமைதிகொள்வார். பொருந்தாதவற்றைப் பொருத்த முயற்சி செய்வதில் நாம் பல நேரங்களில் நம் வாழ்வில் அமைதியை இழந்துவிடுகிறோம்.

'நம் வாழ்வில் நாம் மேற்கொள்ளும் மிக நீண்ட பயணம் நம் உள்மனப் பயணம்' என்கிறார் எழுத்தாளர் பவுலோ கோயலோ.



இந்தப் பயணத்திற்கு முடிவென்பதே கிடையாது. அன்றாடம் நம்மை நாமே தேடிக்கொண்டே இருக்க முடியும். இந்த தேடல் எண்ணங்களாக உருப்பெறுகிறது, இறை எண்ணத்தில், இறைச்சித்ததிற்கு ஏற்றவாறு நடக்கவேண்டும், துன்பத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும், பிறரைப் புரிந்து கொள்ள வேண்டும் மற்றும் ஆன்மாவை வளப்படுத்த உழைக்க வேண்டும் எனும் பண்புகள் அடங்கியிருக்கும்.

இறை எண்ணம் நேர்மறையான எண்ணங்களாக இருக்கும். இறை எண்ணம் நேர்மறையான எண்ணங்களாக மட்டுமல்லாது வளர்ச்சி மிகுந்த எண்ணமாகவும் இருக்கும். நம்முடைய வாழ்க்கையிலும், நாம் நம்முடைய எண்ணங்களை வலுப்படுத்தி, அதிலும் நேர்மையான எண்ணங்களை உருவாக்கி, இறைமகன் இயேசுவின் எண்ணமாம் இறை எண்ணத்தோடு, நேர்மறையான எண்ணத்தோடு, நம்முடைய வாழ்க்கை பயணத்தைத் தொடர்வோம். நம்முடைய எதிர்மறையான எண்ணங்களை, மனித எண்ணங்களை அகற்றிவிட்டு, மன கருவூலத்தில் நேர்மறையான எண்ணத்தோடு வாழ்வோம்.



முனைவர் சி. ஜாக்சன்




தூய பனிமய அன்னைப் பெருவிழா நாள்களின்போது தினமும் மாலை 04.30 முதல் 05.30 வரை சூர்யா, யாழ் தொலைக்காட்சி மற்றும் ஸ்னோஸ் பசிலிக்கா யூடியூப் சேனல் ஆகியவற்றில் பின்வரும் நேரலை நிகழ்வுகள் ஒளிபரப்பப்படும்.

1. ***பனிமய சாட்சியங்கள் : (காணொளிப் பகிர்வு):*** பனிமய அன்னையின் பிள்ளைகள் பகிரும் சாட்சியங்கள் வீடியோ காணொளியாக ஒளிபரப்பப்படும்.
2. ***"மாதாவின் செல்லப் பிள்ளைகள்"*** : பதினைந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் தங்களுக்குப் பிடித்தமான மாதா பாடலை வீடியோவில் பாடி வாட்ஸ் அப் எண்ணுக்கு (82209 47823) அனுப்பி வையுங்கள்.
3. ***உங்களுக்குத் தெரியுமா? போட்டி (வாட்ஸ் அப் நேரலை) :*** மரியன்னை தொடர்பான கேள்விகளுக்கு உடனே உங்கள் வாட்ஸ் அப் வாய்ஸ் மெசேஜ் வழியாகப் பதில் சொல்லுங்கள். உங்கள் பெயர், பங்கின் பெயரையும் சேர்த்துச் சொல்லுங்கள்.
4. ***குழுப் பாடல்கள் :*** தூத்துக்குடி நகரப் பங்குகளின் பாடகர் குழுக்கள் மரியன்னைப் பாடல்களைப் பாடுவர்.
5. ***மறையுரையில் என்னைக் கவர்ந்த கருத்து :*** ஒவ்வொரு நாளும் பிற்பகல் மறையுரையைக் (தேர்ஸ்) கேட்பவர்கள், அதில் உங்களுக்குப் பிடித்தமான ஒரு கருத்தை வாட்ஸ் அப் வாய்ஸ் மெசேஜ் வழியாகப் வாட்ஸ் அப் எண்ணுக்கு (82209 47823) அனுப்பி வையுங்கள். உங்கள் பெயர், பங்கின் பெயரையும் மறவாது சேர்த்துச் சொல்லுங்கள்.
6. ***"என்னைக் கவர்ந்த மாதா பாடல்" :*** விஜய் தொலைக்காட்சியின் "சூப்பர் சிங்கர்" புகழ் இர்வின் விக்டோரியா உங்கள் மனங் கவர்ந்த மாதா பாடல்களை உங்களுக்காகப் பாடுவார். இசைக் கலைஞன் சகோ. பிரபாகர் இசைக் கருவி மீட்டுவார்.
7. ***நேற்று இன்று நாளை :*** பெருவிழா நிகழ்வுகள் பற்றிய அறிவிப்புகள், நினைவூட்டல்கள், பாராட்டுகள் இடம்பெறும்.

# விவிலியப் போட்டி 112

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

## எஸ்தர் அதிகாரம் 1–10 வரை

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. அழகில் சிறந்த பெண்மணி யார்?
2. ஆமானின் மனைவி பெயர் என்ன?
3. ஆமானுடைய சொத்துக்களுக்கு யார் பொறுப்பாளர்?
4. இரண்டு அரக்கப் பாம்புகள் யார்?
5. பூரிம் என்னும் எபிரேயச் சொல்லுக்கு என்ன பெயர்?
6. எஸ்தர் நூலில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?
7. பெண்களுக்கு பொறுப்பாளர் யார்?
8. மாசற்ற ஓரினம் அழிக்கப்படுகிறது என்று தெருக்களில் ஓடியவர் யார்?

***விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.08.2024***

# விவிலியப் போட்டி 111

ஜுலை 2024 விடைக்குறிப்புகள்

## திருப்பாடல்கள் 101 - 105

| | | |
|---|---|---|
| 1. | உள்ளத்தோடு | திபா 101:2 |
| 2. | நடப்போரை | திபா 101:6 |
| 3. | அக்களிப்பதாக | திபா 105:3 |
| 4. | மகிழ்ச்சியோடு | திபா 105:43 |
| 5. | உயிரே | திபா 104:1 |
| 6. | எத்தனை | திபா 104:24 |
| 7. | இரக்கத்தையும் | திபா 103:4 |
| 8. | புல்லைப் | திபா 103:15 |
| 9. | விண்ணகத்தில் | திபா 103:19 |



**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 187**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 118**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 4**

| | | |
|---|---|---|
| 1. | அந்தோனியார் அன்பியம் | ரீனா மொறாயிஸ் |
| 2. | அன்னை தெரசா அன்பியம் | சுகன் மோனீஷா |
| 3. | அன்னை வேளாங்கன்னி அன்பியம் | நான்சி |
| 4. | கிறிஸ்தரசர் அன்பியம் | ஜெகன் டெமினா |

## பாராட்டுக்குரியவர்கள் : 114

**அந்தோனியார் அன்பியம்**
5. லூக்காஸ் சகாயம்
6. சரோஜா
7. ஜெயா
8. பிருந்தா

**அன்னை தெரசா**
9. ரொவீனா ஜோ
10. ஜான்சி ராணி
11. செல்வராணி
12. ரெயிசா சுஜய்
13. பெற்றி சூசையா

**அன்னை வேளாங்கன்னி**
14. டென்சி
15. மிஷல் மிரல்
16. கவாசினி ஆல்வின்

**கிறிஸ்தரசர்**
17. லூரட் வசந்த்
18. ஜூலியட் சாவியோ
19. செலஸ்கி கிளமென்ட்
20. ரெக்ஸ் கிரீன்வெல்

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
21. இருதயம்மாள்

**திவ்யபாலன் அன்பியம்**
22. பிரின்சி
23. சகாயராணி தன்ராஜ்
24. ஸ்டார்லக் ஏஞ்சலின்

**பாத்திமா மாதா**
25. ஜெசிந்தா கான்ஸ்டன்
26. ராஜா ரீனா
27. ஆல்வின் அனு
28. ஜெனிற்றா மைக்கேல்
29. ஆன்ட்ரியா டாரல்
30. ஸ்டெபி ரீகன்
31. இன்பெண்ட் பௌஸ்டினா

**இரக்கத்தின் மாதா**
32. பாப்டிஸ்டா
33. பிரைட்டன் ஜெரோஃபின்
34. இருதயம்மாள் கொன்சால்
35. சித்ரா மோத்தா
36. செல்வி புரோ
37. சகாயராணி
38. சேவியரம்மாள் கோமஸ்
39. ஜியானா ஜோ

**ஜெபமாலை மாதா**
40. சகாயம்மாள் பெனடிக்ட்
41. கல்யாணி செல்வராஜ்

**ஜூடு அன்பியம்**
42. அந்தோனிசாமி
43. ட்ரைபேனா
44. டெரன்சியா அரிஸ்டோ
45. அலெக்சான்ட்ரியா இன்ஃபா
46. சகாயராணி ஜான்சன்
47. வினோத்

**காவல்தூதர்**
48. வெனிட்டாள்
49. எலிஜா இம்மானுவேல்
50. சார்லட் பிராங்க்
51. ஜெசிமா கிளாரன்ஸ்
52. சாந்தி ஆல்ட்ரின்
53. ஜோ ட்ரினிஷா
54. ரஸ்கின் வசந்தா
55. பிரிசில்லா

**குழந்தை தெரசா**
56. கிறிஸ்டி லிஸ்டன்
57. பெனி மொறாயிஸ்
58. இன்பென்டா
59. பெர்லி பென்சன்

**குழந்தை இயேசு**
60. மோனிகா செபாஸ்டின்
61. எமல்டா
62. பிரான்சிஸ் வாஸ்

**மணல் மாதா**
63. ரொசாரி கோமஸ்

**லூர்து மாதா**
64. ரோஸ்லின் தாமஸ்
65. சாண்டினா
66. ஆலிவர் வி. ராயன்
67. ஃபிலோ கோமஸ்
68. ரஜூலா ஜான்போஸ்கோ
69. ஜெனோ சேவியர்

**மிக்கேல் அதிதூதர்**
70. ஜோசபின் பர்னாந்து
71. வினோ அந்தோணி

**பனிமய அன்பியம்**
72. மெர்சி கோமஸ்
73. ஜாக்குலின் வினோதினி
74. சுரேஷ் ஆனி

**பவுலடியார்**
75. ராஜா ரோஸ்லின்
76. ஜான்சன் ஒஃபிலியா
77. லீமா ரோஸ்
78. ஹெலினா

**பரிபூரண மாதா**
79. ஜெனிஷா
80. ஷெர்லின் ஜெனிஸ்
81. மெடோனா

**பொம்பெயி மாதா**
82. மேத்யூ கர்டோசா
83. தெரசா பிரகாஷ்
84. அந்தோனியம்மாள் மச்சாது
85. டிஃபானி அண்டோ
86. ஜான்சிராணி அமல்ராஜ்
87. ஸ்நோ ஆல்ஃப்ரிக்
88. இம்மாக்குலேட் சதீஷ்

**இராயப்பர்**
89. நேவிசம்மாள்

**சவேரியார்**
90. டெலிலா அமலன்
91. அண்டன் சகாயம்
92. அனுஷ்யா பீட்டர்
93. ஜான்சி ஜெயகுமார்
94. பிரின்சி ஆக்னஸ்
95. ரூபா மனுவேல்
96. வினிஸ்டா ஹெரின்

**செபஸ்தியார்**
97. அந்தோனியம்மாள் டென்சிங்
98. ஜெசிலா சேவியர்
99. அஸ்கேனியஸ்

**சிந்தாத்திரை மாதா**
100. நேசம்
101. ஜூடி ஆரோக்கியராஜ்
102. செல்வி லாசர்
103. ராஜி ஜஸ்டின்
104. ஜெஃப்ரினா ராயன்

**சிறுமலர் அன்பியம்**
105. விஜி சகாயராஜ்
106. எல்சிட்டா ஆனந்த்
107. செலஸ்டின்
108. சோஃபியா ஜோசப்

**சூசையப்பர்**
109. கிறிஸ் ரிஜோ
110. ரூபி கொர்னேலியுஸ்
111. ஹேமலதா
112. ஜூலி
113. பிரின்ஸி சுரேஷ்
114. மோனிஷா

**திருச்சிலுவை**
115. சரோலின் கில்டன்
116. ஜஸ்டின் ஸ்நோ குரோரி

**வியாகுல மாதா**
117. ஸ்டிவர்ட்ஸ் சான்ஜோ
118. ராஜா ஜரின்

## பிற பங்குகளிலிருந்து விடை எழுதியவர்கள் : 69

**பரிசு பெறுபவர்கள் : 4**

119. கயத்தாறு — **அமல்ராஜ்**
120. சென்னை — **கமலஜோதி ஜெயசீலன்**
121. தூத்துக்குடி காந்திநகர் — **பேபி வால்டர்**
122. தூத்துக்குடி சார்லஸ் கோவில் — **சகாயிற்றா மச்சாது**

## பாராட்டுக்குரியவர்கள் : 65

**ஆலந்தலை**
123. சகாயராணி
124. பொன்சேகா

**சிப்பிகுளம்**
125. ஜெனசிஸ்

**ஆறுமுகனேரி**
126. தொம்மை அந்தோனி
127. ஜெயராணி

**ஏரல்**
128. ஜாய்ஸ் ரத்தினம்

**புதியம்புத்தூர்**
129. ஹெலன் அன்னமணி

**சென்னை**
130. ரெஜினா கிரகோரி
131. ஒஃபிலியா தாமஸ்
132. எட்வர்ட் அமலி
133. டெனிசா கிளாட்

**செங்கல்பட்டு**
134. மார்கரட் மேரி

**பாளையங்கோட்டை**
135. ரோசி
136. பிரேமா குணசீலன்

**சங்கரன்கோவில்**
137. செல்வமேரி

**பெரியகுளம்**
138. குழந்தை தெரஸ்

**திண்டுக்கல்**
139. ரொசாலி
140. ஜெர்மேன்

**கோயம்புத்தூர்**
141. ராஜேந்திரன் அருள்
142. சத்யா சேவியர்
143. ஆஷா தனசீலன்

**திருச்சி**
144. டோனி

**மதுரை**
145. சகோ. அப்போலின்

**வடக்குத்து**
146. ஹென்றி தாஸ்

**பரமக்குடி**
147. சைமன் சாந்தி

**கொடைக்கானல்**
148. ஜெஸிந்தா மார்ட்டின்

**உடன்குடி**
149. ஆக்னஸ்

**கன்னியாகுமரி**
150. மிக்கேல்

**கோவளம்**
151. செரோபின் ஜோசப்

__தூத்துக்குடி நகர பங்குகள்__

**திரு இதயங்களின் பேராலயம்**
152. ரமோலா கமிலஸ்
153. ரிமோல்டா
154. பீட்டர் ஜெயந்தி
155. மேரி கிரேட்டா

**குருஸ்புரம்**
156. ஆசீர்வாதம்
157. பௌவுசி ஜோ மைக்கேல்
158. ஜான்சி மெண்டிஸ்
159. பிளசி செல்வராஜ்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
160. சுகிர்தா
161. ஷெரினா
162. சகாயம்
163. டோமினிக்

**யூதா ததேயு கோவில்**
164. ரோஸ் சேவியர்
165. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்

**காந்திநகர்**
166. ரியாலினோ
167. அன்சிட்டா
168. பின்டன் சோஃபியா
169. ஷாந்தினி

**சார்லஸ் கோவில்**
170. ஜெசிலி ஞானராஜ்
171. ஜோஸ்பின் மோத்தா

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
172. ரஃபேல் ரூபர்ட்
173. ஜெசிந்தா பர்னாந்து
174. செக்கரியா சாமுவேல்

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
175. விர்ஜின்
176. தயாபர ராணி
177. அமல ஜெயசீலி

**அந்தோனியார் கோவில்**
178. இருதயம்மாள் கபிரியேல்
179. டயானா வினோத்
180. வயோலா ஜான்சன்
181. சுஜாதா மகேஷ்
182. மென்சிலா லொயோலா

**திரேஸ்புரம்**
183. கோல்வின் ஜேசுராஜ்

**இஞ்ஞாசியார்புரம்**
184. சூசை நவின்

**பாத்திமா நகர்**
185. ஜெனோஃபியா
186. மேரி ஹேம்லின்

**மிக்கேல் அதிதூதர்**
187. வென்சி ராணி

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், *குடும்ப அட்டை எண்* மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம்.

**63796 41209** அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 2)

**ஆகஸ்ட் - 2024**

| | | |
|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | **அருள்பணி. ஸ்டார்வின்** |
| உதவிப் பங்குத் தந்தை | : | **அருள்பணி. பாலன்** |
| களப் பணியாளர் | : | **சகோதரர் தினகரன்** |
| பங்கு அலுவலகம் | : | 0461 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| **தினசரி திருப்பலிகள்** | **சனிக் கிழமைகளில்** | | **ஞாயிற்றுக் கிழமைகளில்** | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை **5.00, 6.30, 8.00** | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை **9.30** | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை **5.30** | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை **6.30** | செபமாலை, நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** *திங்கள் முதல் வெள்ளிவரை மாலை 06.15–06.45*
*சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00*

- ✓ *திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (திருவருகைக் காலம், தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)*
- ✓ *புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (திருவருகைக் காலம், தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).*
- ✓ *திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் பிற பங்குகளைச் சார்ந்தவர்களுக்கு திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00 மணிக்கு அனுமதி உண்டு. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.*
- ✓ *ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30*
- ✓ *அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்*
- ✓ *புதுநன்மை அருள்சாதனம் : 28.07.2024*
  திருவிழா நவநாளில் - ஆயர் தலைமையில்

*புதுநன்மை அருள்சாதனம் பெற விரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.*

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : *காலை 10.00 மணி - 01.00 மணி*
  *மாலை 04.00 மணி - 05.30 மணி*
- ✓ *இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.*
- ✓ *நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.*

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

01. பனிமயத் தாயின் **442ஆம் ஆண்டுப் பெருவிழா**வுக்கு ஆயத்தமாக மக்கள் ஒவ்வொரு நாளும் தனியாகவோ, குடும்பமாகவோ, அன்பியமாகவோ பரிந்துரைத்து மன்றாடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். தாயின் பெருவிழாவைக் கொண்டாடுவது என்பது தாய்க்கு மகிமை சேர்க்கவும், நாம் இறையன்பிலும், பிறரன்பிலும் வளர வேண்டும் என்னும் நோக்கத்தோடு கொண்டாடவும்தான். அதற்காக சிறப்பாக ஜெபிக்க கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

02. பனிமயத் தாயின் 442ஆம் ஆண்டுப் பெருவிழாவுக்கான அறிக்கைகள் ஜூலை 01ஆம் தேதி முதல் மக்களுக்கு வழங்கப்பட்டது.

03. பனிமயத்தாயின் 442 ஆம் ஆண்டுப் பெருவிழா தொடர்பாக 03.07.2024 புதன் காலை பங்குத்தந்தையும் பங்குப் பேரவை உறுப்பினர்களும் இணைந்து மாண்புமிகு அமைச்சர் திருமதி. கீதாஜீவன்,மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் காவல்துறை உட்பட அனைத்துத் துறை சார்ந்த அதிகாரிகளையும் பெருவிழா அழைப்பிதழ் கொடுத்து வரவேற்றார்கள். ஆகஸ்ட் 05 அன்று உள்ளூர் விடுமுறை, பெருவிழா நாள்களில் பாதுகாப்பு மற்றும் இதர துறைகளின் ஒத்துழைப்பு ஆகியன பற்றி ஆலோசித்தார்கள்.

04. நமது பங்கின் **அமலவை** இல்லத்திற்குப் புதிதாக அருள்சகோதரி **நான்சி** அவர்கள் பணியாற்ற வந்துள்ளார்கள். அவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம்.

05. 06.07.2024 மாதத்தின் **முதற் சனி**. அன்று மாலையில் சப்பரப் பவனி, நவநாள் வழிபாடு, நற்கருணை ஆசீர் நடைபெற்றது. இந்நிகழ்வுகள் நமது ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், யாழ், சூர்யா தொலைக்காட்சியிலும் **நேரலையாக** ஒளிபரப்பப்பட்டது.

06. பேராலயத்தின் 442ஆவது பெருவிழாவை கொண்டாடுவது தொடர்பான பொறுப்புகளையும், கருத்துக்களையும் அறிந்து கொள்ளவும் திருவிழாவைப் பற்றி இன்னும் கலந்து ஆலோசிக்கவும் 10.07.2024 அன்று மாலை 07.00 மணிக்கு நடந்த பொதுக்குழுக் கூட்டத்தில் பேரவை உறுப்பினர்களின் முன்னிலையில் கருத்துக்கள் கேட்கப்பட்டன.

07. நமது பங்கின் பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையினர் தங்களின் திருவிழாவை 21.07.2024 ஞாயிறு இரண்டாம் திருப்பலியில் கொண்டாடினர். புதிய பொறுப்பாளர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

08. பெருவிழா ஆயத்தமாக 25.07.2024 வியாழக்கிழமை மாலை 06.00 மணிக்குக் கொடிப் பவனி, நகரின் தெருக்களில் வலம் வந்து பேராலயம் வந்தடைந்தது. ஏராளமான இறைமக்கள் காணிக்கைகள் ஏந்தி வந்தனர்.

# பங்கில் நிகழ்ந்தவை



## *வரவேற்கிறோம்*

### 1. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 5. | ரிஷான் ஜோ | இன்பென்ட் ஹார்ட்லி - சுகன்யா | 14.07.2024 | பரிபூரண மாதா |



## *வாழ்த்துகின்றோம்*

### 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 6. | பெர்ஜ்வின் ரொட்ரிகோ | பெர்னி - சுஜிதா | 13.07.2024 | அந்தோணியார் |
| 7. | பிஜுவின் ரொட்ரிகோ | பெர்னி - சுஜிதா | 13.07.2024 | அந்தோணியார் |
| 8. | இன்ஃபண்ட் கெசன்ட்ரா | கெனிட்டன்ராஜ் - ஷீபா | 20.07.2024 | குழந்தை இயேசு |



## *ஆசி கூறுகின்றோம்*

### 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 3. | ஜெபஸ்டன் - சௌமியா | லூர்து மாதா | 10.07.2024 |
| 4. | ஜோ கிறிஸ்டோ - சாந்தி நிகேதா | பொம்பெய் மாதா | 10.07.2024 |
| 5. | டிஷான் - ரோனிஷா | குழந்தை இயேசு | 12.07.2024 |



## *செபிக்கின்றோம்*

### 4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 6. | ஸ்தனிஸ் அருளப்பன் பர்னாண்டஸ் | தவமணி | 16.07.2024 | லூர்து மாதா |

# நடைபெறவிருப்பவை

★ 09.08.2024 வெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.

## பெருவிழா தொடர்பான அறிவிப்புகள்

1. **தெருக்களை ஆயத்தப்படுத்துதல்**
   ★ பின்வரும் நாட்களில் பவனி நடைபெற இருக்கிற தெருக்களை சுத்தமாகவும், போதிய வெளிச்சமாகவும் வைத்து கொள்ளவும்.
   25-07-2024 வியாழன் - கொடிப் பவனி
   28-07-2024 ஞாயிறு - நற்கருணைப் பவனி
   05-08-2024 திங்கள் - சப்பரப் பவனி
   ★ கட்டிடப்பணிகள் நடைபெற்றால், கட்டுமான பொருட்களை அகற்றவும்;.
2. **அலுவலகப் பணிகள் :** பெருவிழா நாட்களில் பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ்கள் வழங்கப்பட மாட்டாது. வழக்கமான அலுவலகப் பணிகளுக்காக பங்குத்தந்தையரையோ, பங்கு அலுவலகத்தையோ அணுக வேண்டாம்.
3. **நேர்ச்சை பால் வழங்குபவர்கள் :** பெருவிழா நாட்களில் நேர்ச்சை பால் வழங்குபவர்கள் கொடிமர வளாகத்தில் மட்டுமே வழங்க கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.
4. **தலைக் கவசம் அணிதல் :** பெருவிழா நாட்களில் இரு சக்கர வாகனங்களில் வருபவர்கள் அனைவரும் தலைக் கவசம் (Helmet) அணிந்து காவல்துறைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
5. **பிளாஸ்டிக் தடைக்கு ஒத்துழைப்பு :** தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து பனிமய அன்னைப் பெருவிழாவை "பிளாஸ்டிக் இல்லாத விழாவாக" கொண்டாட முன் வருவோம். எனவே, பிளாஸ்டிக் குவளைகள், பிளாஸ்டிக் பைகள், ஸ்ட்ரா, பிளாஸ்டிக் குடிதண்ணீர் பாட்டில் ஆகியவை பேராலய வளாகத்திற்குள் தடை செய்யப்படுகின்றன. அனைவரும் ஒத்துழைப்பு தாருங்கள்.
6. **பிறமத பக்தர்களுக்கு வரவேற்பு :** பெருவிழா நாட்களில் பனிமய அன்னையைத் தரிசிக்க வருகின்ற பிற சபை, பிற சமயங்களைச் சேர்ந்த சகோதர, சகோதரிகளை வரவேற்று அவர்களுக்கு ஒத்துழைப்பும், முன்னுரிமையும் கொடுத்து, "பனிமயத்தாய் எல்லாருக்கும் தாய்" என்பதை எண்பிப்போமாக!

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

❖ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.

❖ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண் | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 06. | 06.08.2024 | செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின் குமார் | ஆவியின் வரம்: ஞானம் |
| 07. | 13.08.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | ஆவியின் வரம்: பக்தி |
| 08. | 20.08.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | ஆவியின் வரம்: இறையச்சம் |
| 09. | 27.08.2024 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | ஆவியின் வரம்: திடம் |

# நினைவு அஞ்சலி

"உன்னதரை உம் உறைவிடமாக்கிக் கொண்டீர்"
(திபா 91:9)



முதலாம் ஆண்டு

## A.சரோஜா பர்னாந்து

தோற்றம் 31.12.1947

மறைவு 30.08.2023

8ஆம் ஆண்டு



தோற்றம் 17.01.1937

மறைவு 28.05.2016

## P.அந்தோணி பிச்சை பர்னாண்டோ

29ஆம் ஆண்டு



தோற்றம் 19.03.1934

மறைவு 06.05.1995

## Rev.Sr.மேரி சோபியா பாரா T.F.B.C.

பிரிவால் வருந்தும் குடும்பத்தினர்

மகள், மருமகன், பேரன்கள்

Made with PosterMyWall.com

நான் உடலால் உங்களோடு இல்லாவிடினும்
உள்ளத்தால் உங்களோடு இருக்கிறேன்.
(1கொரி 5:3)

# ச. பெல்லார்மின் பர்னாந்து

தோற்றம் 06.12.1940 மறைவு 05.07.2021



போராட்டம் மிகுந்த இம்மண்ணுலக வாழ்வை விடுத்து
இறைவா, உம் பதம் நாடி வந்த
நின் அடியவரின் ஆன்மாவிற்கு
நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும்.

*மறவாமல் நினைத்துக் கொண்டிருக்கும்*
மனைவி
மக்கள் – மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

# அன்பின் நினைவஞ்சலி

"மகிழ்ச்சியூட்டும் இடத்தில் எனக்குப் பங்கு உண்டு" (திபா 15:6).

# தா. ரதேஷ் பர்னாந்து

(உடற்கல்வி ஆசிரியர், வீரபாண்டியன்பட்டணம்)

தோற்றம் 27.02.1974 மறைவு 02.01.2024



மண்ணுலக வாழ்க்கையினை விடுத்து
விண்ணுலக அரசினை வந்தடைந்துள்ள
நின் அடியானை உம் தூதர்களோடும் தூயவர்களோடும்
இணைத்துக் கொள்ள வேண்டி நிற்கின்றோம்.

*மறைந்தபோதிலும்*
*நினைத்துக் கொண்டிருக்கும்*
குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

## MINDO
## V. ROYEN M.



தோற்றம்
11.03.1970

மறைவு
05.08.2023

தாயவள் தஸ் நேவிஸ் மாமரியின் மடியில்
தன் உயிரை சமர்ப்பித்த அன்பு தந்தை
எங்கள் வாழ்வின் நிழலாய் தொடர்ந்து
கதிர்ஒளியாய் வழிநடத்தி வருகின்ற,
உங்கள் அளவுகடந்த அன்பையும், பாசத்தையும்
பெற்று மகிழ்ந்து பூரிப்படையும் நாங்கள்
உங்கள் ஆன்மா நித்திய அமைதியில் நிலைக்க ஜெபிக்கின்றோம்.

பிரிவால் வாடும்
உம் குடும்பத்தினர்

*நினைவுத் திருப்பலி*

**06.08.2024 செவ்வாய்க் கிழமை காலை 11 மணிக்கு திருச்சிலுவை சிற்றாலயத்தில் வைத்து நடைபெறும்.**

Made with PosterMyWall

# Death Anniversary



**Delicate Machado**

Born 23.06.1923

Heaven 30.07.2008

**D. Navis Mary Machado**

Born 06.11.1934

Heaven 05.08.2003

இறைவா இவர்களுக்கு நித்திய இளைப்பாற்றி அளித்தருளும்.
முடிவில்லா ஒளி இவர்கள்மேல் ஒளிரச் செய்தருளும்.

இதைக் காணும் யாவரும்
இவர்களது இளைப்பாற்றிக்காக பிரார்த்திக்கவும்

பிரிவால் வருந்தும்

மகன் - மருமகள்
மகள் - மருமகன்
பேரன் - பேத்திகள்

Made with PosterMyWall.com

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

## பரலோகமே என் சொந்தமே

எங்களுக்காக பாடுகள் பட்டு, உழைத்து,
ஜெப தவம் செய்து
உன்னையே நீ அர்ப்பணித்தாய்
எங்கள் பசி போக்கி
துன்ப நேரத்தில் ஆறுதலாய்
இன்ப வேளையில் புன்சிரிப்பாய்
உன் அரவணைப்பில் அணைத்து
அருள்மழை பொழிந்தாயே
நாங்கள் சரித்திரம் படைத்தாலும் சரி
சறுக்கி விழுந்தாலும் சரி
சாய்ந்து தூங்க உன்மடி தந்தாயே
இத்தனை செய்த உனக்கு - நாங்கள்
எத்தனை நன்றி சொல்வோம்
எங்கள் மனதில் அழியாத ஓவியம் நீ
எங்களால் மறக்க முடியாத காவியம் நீ



# பிலோ சோரீஸ்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16.04.1955 | 01.08.2023 |

அன்புக் கணவர் : பயஸ் சோரீஸ்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உற்றார் உறவினர்கள்

27A, கிரகோப் தெரு, தூத்துக்குடி - 1.

## தூத்துக்குடி

# புனித பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்



ஏழுகடல் துறையுடன் எல்லார்க்கும்
ஏக அடைக்கலத் தாய்
திவ்விய சந்த மரிய தஸ்நேவிஸ் மாதாவின்
442ஆம் ஆண்டு

## பெருவிழா சிறப்பு நிகழ்வுகள் – 2024

"இவரே உம் தாய்" (யோவா 19:27)

| | | | | |
|---|---|---|---|---|
| 25.07.2024 | வியாழன் | மாலை | 06.00 மணி | சிறப்பு கொடிப் பவனி |
| 26.07.2024 | வெள்ளி | காலை | 07.00 மணி | கூட்டுத் திருப்பலி, கொடியேற்றம் |
| | | நண்பகல் | 12.00 மணி | அன்னைக்குப் பொன் மகுடம் அணிவித்தல் |
| 28.07.2024 | ஞாயிறு | காலை | 07.30 மணி | புதுநன்மைத் திருப்பலி |
| | | மாலை | 06.15 மணி | திவ்ய நற்கருணை பவனி |
| 04.08.2024 | ஞாயிறு | இரவு | 07.00 மணி | பெருவிழா மாலை ஆராதனை - மேதகு ஆயர் ஸ்டீபன் |

## 05.08.2024 திங்கள் பெருவிழா

| | | |
|---|---|---|
| காலை | 04.30 மணி | முதல் திருப்பலி |
| காலை | 05.30 மணி | 2-ஆம் திருப்பலி |
| காலை | 07.30 மணி | திருவிழாத் திருப்பலி - மேதகு ஆயர் ஸ்டீபன், தூத்துக்குடி |
| காலை | 09.00 மணி | 4-ஆம் திருப்பலி - பேரருள்திரு. ரவிபாலன், மறைமாவட்ட முதன்மைக்குரு |
| காலை | 10.00 மணி | 5-ஆம் திருப்பலி - மேதகு ஆயர் இவோன் அம்புரோஸ், பணி நிறைவு |
| நண்பகல் | 12.00 மணி | 6-ஆம் திருப்பலி - மண்ணின் மைந்தர்கள் |
| மாலை | 03.00 மணி | செபமாலை, அருளிக்க ஆசீர் |
| மாலை | 05.00 மணி | 7-ஆம் திருப்பலி - மேதகு ஆயர் அந்தோனிசாமி, பாளை. |
| இரவு | 07.00 மணி | புனித பனிமய அன்னையின் திருவுருவப் பவனி |
| இரவு | 10.00 மணி | புனித பனிமய அன்னைக்கு குடும்பங்களை ஒப்புக் கொடுத்தல் |

**நவநாட்களில்**

காலை 04.30 : செபமாலை - தொடர்ந்து திருப்பலிகள்
மாலை 03.00 : செபமாலை, மறையுரை, அருளிக்க ஆசீர் (தேர்ஸ்)
இரவு 07.15 : செபமாலை, பிரார்த்தனை, நற்கருணை ஆசீர்

*அன்னையின் பிள்ளைகள் அனைவரையும் அன்புடன் அழைக்கும்*

பங்கு மேய்ப்புப் பணிக்குழு
துறவியர், பக்த சபையினர்
இறைமக்கள்

அருள்பணி. ஸ்டார்வின், பங்குத்தந்தை
அருள்பணி. பாலன், உதவிப் பங்குத்தந்தை
அருள்சகோ. தினகரன்

Ph. 0461-2320854, 8220947823 www.snowsbasilica.com

SHINY Ph: 98421 31493